# விருதுநகர் மாவட்ட கனிம அறக்கட்டளை 2022-2023-ம் நிதி ஆண்டு அறிக்கை

## (Annual Report)

அரசாணை (எம்.எஸ்) எண்:58 தொழில் (எம்.எம்.டி.1) துறை நாள்:19.05.2017, அரசாணை (எம்.எஸ்) எண்:90 தொழில் (எம்.எம்.டி.1) துறை நாள்:27.07.2017 மற்றும் அரசாணை (எம்.எஸ்) எண்:81 தொழில் (எம்.எம்.டி.1) துறை நாள்:14.08.2018-ன்படி உருவாக்கப்பட்ட தமிழ்நாடு மாவட்ட கனிம கட்டமைப்பு விதிகள் 2017-ன்படி விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.கேவி1/588/2017, நாள்: 29.08.2017-ன்படி விருதுநகர் ம்ாவட்ட கனிம அறக்கட்டளையானது கீழ்க்குறிப்பிட்டுள்ள அலுவலர்களை உறுப்பினர்களாக கொண்டு உருவாக்கப்பட்டு, இவ்வறக்கட்டளையானது ஆவண எண் 8/2017 (Book-IV) நாள்: 11.09.2017-ன்படி விருதுநகர் மாவட்டம், சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. புவியியல் மற்றும் சுரங்கத்துறை இயக்குநரின் நேர்முக கடித எண்.5449/MMD/2020, நாள்:29.08.2021-ன்படி சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கிய நிர்வாககுழு அமைப்பு மாவட்ட ஆட்சியரின் செயல்முறை ஆணை எண்.KV1/558/2017, நாள்:07.09.2021-ன்படி ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

| வ. எண் | நிர்வாகக் குழு அமைப்பு | | மேலாண்மைக் குழு அமைப்பு |
|---|---|---|---|
| 1. | மாவட்ட ஆட்சியர், விருதுநகர் | 1. | மாவட்ட ஆட்சியர், விருதுநகர் |
| 2. | மாவட்ட வருவாய் அலுவலர், விருதுநகர் | 2. | மாவட்ட வருவாய் அலுவலர், விருதுநகர் |
| 3. | துணை/உதவி இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, விருதுநகர் | 3. | துணை/உதவி இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, விருதுநகர் |
| 4. | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, விருதுநகர் | 4. | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, விருதுநகர் |
| 5. | மாவட்ட ஆட்சியரின் நேர்முகஉதவியாளர், விருதுநகர். | 5. | துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள், விருதுநகர் |
| 6. | உதவி இயக்குநர், ஊரகவளர்ச்சித் துறை, விருதுநகர். | 6. | முதன்மைக் கல்வி அலுவலர், விருதுநகர் |
| 7. | மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், விருதுநகர். | 7. | மாவட்ட கருவூல அலுவலர், விருதுநகர் |

| | | | |
|---|---|---|---|
| 8. | மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், விருதுநகர் | 8. | மாவட்ட சமூகநல அலுவலர், விருதுநகர் |
| 9. | மாவட்ட வன அலுவலர், விருதுநகர் | 9. | உதவி இயக்குநர் (பஞ்சாயத்து), விருதுநகர். |
| 10. | முதன்மைப் பொறியாளர், பொதுப்பணித்துறை,கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, விருதுநகர் | 10. | பசுமை இயக்கம், சாத்தூர். |
| 11. | உதவி இயக்குநர், நிலஅளவைப் பதிவேடுகள் துறை, விருதுநகர் | 11. | S.வீரபாண்டியன், பழைய எண். A110, புதிய எண்.2060,தென்றல் நகர்,செண்பகத் தோப்பு மற்றும் இராஜபாளையம் ரோடு, விருதுநகர். |
| 12. | மாவட்ட கருவூல அலுவலர், விருதுநகர் | | |
| 13. | மாவட்ட சமூகநல அலுவலர், விருதுநகர் | | |
| 14. | துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள், விருதுநகர் | | |
| 15 | நாடாளுமன்ற உறுப்பினர்கள் விருதுநகர்,தென்காசி, இராமநாதபுரம் | | |
| 16 | சட்டமன்ற உறுப்பினர்கள் விருதுநகர்,சாத்தூர், சிவகாசி, இராஜபாளைம், ஸ்ரீவில்லிபுத்தூர், அருப்புக்கோட்டை, திருச்சுழி | | |

விருதுநகர் மாவட்ட கனிம அறக்கட்டளைக்காக, விருதுநகர் மாவட்ட ஆட்சியரை தலைவராக கொண்டு பாரத ஸ்டேட் வங்கி கிளையில் ஒரு வங்கிக் கணக்கு (கணக்கு எண். 37191368233) துவங்கப்பட்டு கனிமங்களுக்கான உரிமக் கட்டணத்தின் அடிப்படையில் உரிய விதிகளின்படி மாவட்ட கனிம கட்டமைப்பிற்கான நிதி வசூலிக்கப்பட்டு வருகிறது.

விருதுநகர் மாவட்டத்தில் 12.01.2015-க்கு பின்னர் வழங்கப்பட்ட பெருங்கனிம மற்றும் சிறுகனிம குவாரிகளில் இருந்து எடுத்து செல்லப்படும் கனிமங்களுக்கு உரிமக் கட்டணத்தில் 10% தொகையானது கனிம அறக்கட்டளை நிதியாக வசூலிக்கப்படுகிறது. 12.01.2015-க்கு முன்னர் வழங்கப்பட்ட பெரு/சிறுகனிம குவாரிகளில் இருந்து எடுத்து செல்லப்படும் கனிமங்களுக்கு உரிம கட்டணத்தில் 30% கனிம அறக்கட்டளை நிதியாக வசூல் செய்யப்பட்டு வருகிறது.

விருதுநகர் மாவட்ட கனிம அறக்கட்டளை நிதி கணக்கில் 31.03.2022 வரை ரூ.13,92,49,782/- இருப்பில் இருந்தது. திட்டங்களுக்கு செலவீடு செய்யப்பட்ட தொகை மற்றும் வங்கிக் கட்டணம் போக ரூ.17,22,43,009/- 31.03.2023 வரை இருப்பில் உள்ளது.

விருதுநகர் மாவட்ட கனிம அறக்கட்டளை நிதிக்கணக்கில் 2022-2023 ஆம் ஆண்டிற்கு சிறுகனிம மற்றும் பெருங்கனிம குவாரிகள் மூலம் வசூல் செய்யப்பட்ட தொகை மற்றும் கைப்பற்றப்பட்ட வாகனங்களை விடுவிப்பதற்காக மாவட்ட கனிம அறக்கட்டளை நிதிக்கணக்கில் செலுத்தப்பட்ட மொத்த தொகையின் மாத வாரியான விபரம் கீழ்கண்ட அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| மாதம் | வசூல் செய்யப்பட்ட மொத்த தொகை (ரூ.) | முரண்பாட்டு சேகரிப்பு தோகை (ரூ.) | குறிப்புகள் |
|---|---|---|---|
| ஏப்ரல்-22 | 3003461 | 6867773 | விருதுநகர் மாவட்டத்தில் 7 தடுப்பணைகள் உருவாக்கும் திட்டத்திற்காகவும் மற்றும் 50 புதிய ஆழ்துளை கிணறுகள் மூலம் ஆதாரத்தை பெருக்கும் திட்டங்களுக்கு ரூ.3,36,00,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதில் செலவிடப்பட்ட தொகை ரூ.2,67,32,227 போக மீதமுள்ள தொகை ரூ.68,67,773 திருப்பி அனுப்பப்பட்டுள்ளது. |
| மே-22 | 3494716 | 0 | - |
| ஜூன்-22 | 3416407 | 0 | - |
| ஜூலை-22 | 3334121 | 0 | - |
| ஆகஸ்ட்-22 | 3778693 | 0 | - |
| செப்ட்-22 | 3652071 | 0 | - |
| அக்டோ-22 | 3810303 | 0 | - |
| நவம்-22 | 3986989 | 0 | - |
| டிசம்-22 | 3940449 | 0 | - |
| ஜனவரி-23 | 3183554 | 0 | - |
| பிப்ர-23 | 3977055 | 0 | - |
| மார்ச்-23 | 6168997 | 0 | - |
| **மொத்தம்** | **4,57,46,816** | **68,67,773** | |

2022-2023-ம் நிதியாண்டில் மாவட்ட ஆட்சியரின் செயல்முறை ஆணையின்படி 13 திட்டப் பணிகளுக்கு புதியதாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 20 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட திட்டப்பணிகளுக்கு 2022-2023 ஆம் ஆண்டு காசோலை மூலமாக நிதி வழங்கப்பட்டுள்ளது. அவற்றில் 18 திட்டப்பணிகள் முற்றிலுமாக முடிக்கப்பட்டன.

புதியதாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட திட்டப்பணிகளின் விபரங்கள் கீழ்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

| வ. எண் | திட்ட செயலாக்கம் | செயல்படுத்தும் துறை | ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (ரூ.) |
|---|---|---|---|
| 1. | விருதுநகர் மாவட்டத்தில் கண்மணி திட்டத்தின் கீழ் எடை குறைந்த குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து அதிகரிக்கும் திட்டம் - இரண்டாவது தவணை | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம் | 8,08,637 |
| 2. | விருதுநகர் மாவட்டத்தில் கண்மணி திட்டத்தின் கீழ் எடை குறைந்த குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து அதிகரிக்கும் திட்டம் - மூன்றாவது தவணை | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம் | 8,94,156 |
| 3. | விருதுநகர் மாவட்டத்தில் ஆரம்ப சுகாதார நிலையங்களில் அதிக குழந்தைகள் பெற்ற 400 தாய்மார்களுக்கு கருத்தடை செய்ய ஊக்குவிக்கும் பொருட்டு பரிசு பொருட்கள் வழங்கும் திட்டம் | சுகாதாரத் துறை | 4,01,200 |
| 4. | காரியாபட்டி அரசு மருத்துவமனையில் ஆக்ஸிஜன் உற்பத்தி நிலையத்தில் உள்கட்டமைப்பு வசதிகள் செய்யும் திட்டம் | பொதுப்பணித் துறை | 19,00,000 |
| 5. | விருதுநகர் மாவட்டத்தில் கண்மணி திட்டத்தின் கீழ் 0 முதல் 6 வயது வரையுள்ள எடை குறைந்த குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து அதிகரிக்கும் திட்டம் - நான்காவது தவணை | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம் | 6,87,312 |

| | | | |
|---|---|---|---|
| 6. | விருதுநகர் மாவட்டத்தில் ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்ள 753 கர்ப்பிணி பெண்களுக்கு இரத்த சோகை போக்குவதற்கு ஊட்டச்சத்து பொருட்கள் வழங்கும் திட்டம் | சுகாதாரத் துறை | 4,14,150 |
| 7. | விருதுநகர் மாவட்டத்தில் அரசு மருத்துவமனை, அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் அரசு சுகாதார நிலையங்களில் பெண்களை கருத்தடை அறுவை சிகிச்சை செய்ய ஊக்குவிக்கும் பொருட்டு ஒவ்வொரு பயனாளிக்கும் 3 மாதங்களுக்கு ரூ.500 மதிப்பிலான பரிசு வழங்கும் திட்டம் | மருத்துவம் மற்றும் கிராமப்புற சுகாதார சேவைகள் மற்றும் குடும்ப நலன் | 2,40,000 |
| 8. | உலக வாசெக்டாமி வாரம் 2022-ன் போது 35 ஆண்களுக்கு கருத்தடை செய்ய ஊக்குவிக்கும் பொருட்டு முன்பணம் வழங்கும் திட்டம் | மருத்துவம் மற்றும் கிராமப்புற சுகாதார சேவைகள் மற்றும் குடும்ப நலன் | 1,01,500 |
| 9. | 53 ஆதி திராவிடர் விடுதிகள் மற்றும் 8 பள்ளிகளில் புதிய சுத்திகரிப்பு கருவிகள் நிறுவும் திட்டம் | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் | 5,49,000 |
| 10. | உலக தடுப்பூசி வாரம் 2022 ன் போது 25 ஆண்களுக்கு கருத்தடை செய்ய திட்டமிட்டுள்ளதால், அவர்களுக்கு ரூ.2900 வழங்கும் திட்டம் | மருத்துவம் மற்றும் கிராமப்புற சுகாதார சேவைகள் மற்றும் குடும்ப நலன் | 72,500 |
| 11. | விருதுநகர் மாவட்டத்தில் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பரிசோதனைக்கு வரும் 790 கர்ப்பிணி பெண்களுக்கு ரூ.600 மதிப்புள்ள ஊட்டச்சத்து பொருட்கள் வழங்கும் திட்டம் | பொது சுகாதாரத்துறை | 4,74,000 |
| 12. | விருதுநகர் மாவட்ட விளையாட்டு அரங்கத்திற்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டம். | மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நல அலுவலர், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் | 3,49,648 |
| 13. | காரியாபட்டி அரசு மருத்துவமனையில், உள்ள PSA ஆக்ஸிஜன் ஆலைக்கு மின் இணைப்பு ஏற்படுத்தும் திட்டம் | பொதுப்பணித் துறை | 19,30,000 |
| | மொத்தம் | | 88,22,103 /- |

நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட திட்டப்பணிகளுக்கு 2022-2023 ஆம் ஆண்டு காசோலை மூலமாக நிதி வழங்கப்பட்ட திட்டப்பணிகளின் விபரங்கள் கீழ்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

| வ. எண் | திட்ட செயலாக்கம் | காசோலை வழங்கப்பட்ட நாள் | காசோலை எண் | விடுவிக்கப்பட்ட தொகை(ரூ.) |
|---|---|---|---|---|
| 1 | விருதுநகர் மாவட்டத்தில் உள்ள கேந்திரிய வித்தியாலயா பள்ளியில் இரட்டை மேஜைகள், ஆசிரியர்களுக்கான அட்டவணைகள் மற்றும் கணினி அட்டவணை, குழந்தைகள் பூங்காவிற்கு தேவையான உபகரணங்கள் மற்றும் 10KVA வழங்கும் திட்டம் | 29.04.2022 | TO CLEARING-UBI KENDRIYAVIDYALAYA VIDYALA--81944 | 100,000.00 |
| 2 | விருதுநகர் மாவட்டத்தில் கண்மணி திட்டத்தின் கீழ் எடை குறைந்த குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து அதிகரிக்கும் திட்டம் - இரண்டாவது தவணை | 10.05.2022 | CHEQUE WDL-CHEQUE TRANSFER TO--81945 | 808,637.00 |
| 3 | விருதுநகர் மாவட்டத்தில் உள்ள கேந்திரிய வித்தியாலயா பள்ளியில் இரட்டை மேஜைகள், ஆசிரியர்களுக்கான அட்டவணைகள் மற்றும் கணினி அட்டவணை, குழந்தைகள் பூங்காவிற்கு தேவையான உபகரணங்கள் மற்றும் 10KVA வழங்கும் திட்டம் | 02.06.2022 | TO CLEARING-CAB K M ENTERPRISES PUDUCHER--81943 | 172,800.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | விருதுநகர் மாவட்டத்தில் உள்ள கேந்திரிய வித்தியாலயா பள்ளியில் இரட்டை மேஜைகள், ஆசிரியர்களுக்கான அட்டவணைகள் மற்றும் கணினி அட்டவணை, குழந்தைகள் பூங்காவிற்கு தேவையான உபகரணங்கள் மற்றும் 10KVA வழங்கும் திட்டம் | 04.06.2022 | TO CLEARING-CAB VIRUDHUNAGAR SARVODAYAS--81942 | 400,000.00 |
| 5 | கணவனால் கைவிடப்பட்ட விதவைகளுக்கு தையல் இயந்திரம் வழங்கும் திட்டம் | 17.06.2022 | TO CLEARING-ICI N R VELAYUTHARAJA--81946 | 497,987.00 |
| 6 | விருதுநகர் மாவட்டத்தில் கண்மணி திட்டத்தின் கீழ் எடை குறைந்த குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து அதிகரிக்கும் திட்டம் - மூன்றாவது தவணை | 06.07.2022 | CHEQUE WDL-CHEQUE TRANSFER TO--81947 | 894,156.00 |
| 7 | விருதுநகர் மாவட்டத்தில் சிவகாசி கால்நடை மருந்தக கட்டிடத்தில் சுற்றுச்சுவர் கட்டும் திட்டம் | 12.12.2022 | TO CLEARING-BOB NEW INTERMEDIARY OBD BP B--81948 | 829,800.00 |
| 8 | விருதுநகர் மாவட்டத்தில் நாரணாபுரம் கால்நடை மருந்தக கட்டிடத்தில் சுற்றுச்சுவர் கட்டும் திட்டம் | 12.12.2022 | TO CLEARING-BOB NEW INTERMEDIARY OBD BP B--81949 | 969,800.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 9 | விருதுநகர் மாவட்டம் திருத்தங்கலில் உள்ள ஆண்கள் அரசு மேல்நிலைப்பள்ளியில் 6 வகுப்பறைகள் கட்டும் திட்டம் | 12.12.2022 | TO CLEARING-BOB NEW INTERMEDIARY OBD BP B--81950 | 2,300,000.00 |
| 10 | விருதுநகர் மாவட்டம் திருத்தங்கலில் உள்ள பெண்கள் அரசு மேல்நிலைப்பள்ளியில் 4 வகுப்பறைகள் கட்டும் திட்டம் | 12.12.2022 | TO CLG CHQ-BOB TO CLEARING CHEQUE--81951 | 5,500,000.00 |
| 11 | விருதுநகர் மாவட்டத்தில் ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்ள 753 கர்ப்பிணி பெண்களுக்கு இரத்த சோகை போக்குவதற்கு ஊட்டச்சத்து பொருட்கள் வழங்கும் திட்டம் | 23.12.2022 | TO CLEARING-IOB DEPUTY DIRECTOR OF HEALT--81954 | 414,150.00 |
| 12 | உலக வாசெக்டாமி வாரம் 2022-ன் போது 35 ஆண்களுக்கு கருத்தடை செய்ய ஊக்குவிக்கும் பொருட்டு முன்பணம் வழங்கும் திட்டம் | 04.01.2023 | CHEQUE WDL-CHEQUE TRANSFER TO--81957 | 101,500.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 13 | விருதுநகர் மாவட்டத்தில் அரசு மருத்துவமனை, அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் அரசு சுகாதார நிலையங்களில் பெண்களை கருத்தடை அறுவை சிகிச்சை செய்ய ஊக்குவிக்கும் பொருட்டு ஒவ்வொரு பயனாளிக்கும் 3 மாதங்களுக்கு ரூ.500 மதிப்பிலான பரிசு வழங்கும் திட்டம் | 04.01.2023 | CHEQUE WDL-CHEQUE TRANSFER TO--81958 | 240,000.00 |
| 14 | விருதுநகர் மாவட்டத்தில் கண்மணி திட்டத்தின் கீழ் 0 முதல் 6 வயது வரையுள்ள எடை குறைந்த குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து அதிகரிக்கும் திட்டம் - நான்காவது தவணை | 04.01.2023 | CHEQUE WDL-CHEQUE TRANSFER TO--81953 | 687,312.00 |
| 15 | காரியாபட்டி அரசு மருத்துவமனையில் ஆக்ஸிஜன் உற்பத்தி நிலையத்தில் உள்கட்டமைப்பு வசதிகள் செய்யும் திட்டம். | 06.01.2023 | TO CLEARING-BOB NEW INTERMEDIARY OBD BP B--81956 | 1,900,000.00 |
| 16 | உலக தடுப்பூசி வாரம் 2022 ன் போது 25 ஆண்களுக்கு கருத்தடை செய்ய திட்டமிட்டுள்ளதால்அவர்களுக்கு ரூ.2900 வழங்கும் திட்டம் | 21.01.2023 | CHEQUE WDL-CHEQUE TRANSFER TO--81960 | 72,500.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 17 | விருதுநகர் மாவட்டத்தில் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பரிசோதனைக்கு வரும் 790 கர்ப்பிணி பெண்களுக்கு ரூ.600 மதிப்புள்ள ஊட்டச்சத்து பொருட்கள் வழங்கும் திட்டம் | 01.02.2023 | TO CLEARING-IOB DEPUTY DIRECTOR OF HEALT--966828 | 474,000.00 |
| 18 | விருதுநகர் மாவட்ட விளையாட்டு அரங்கத்திற்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டம். | 06.02.2023 | TO CLEARING-INB NEWGALAXYSPORTS--966830 | 349,648.00 |
| 19 | காரியாபட்டி அரசு மருத்துவமனையில் உள்ள PSA ஆக்ஸிஜன் ஆலைக்கு மின் இணைப்பு ஏற்படுத்தும் திட்டம் | 07.02.2023 | CHEQUE WDL-CHEQUE TRANSFER TO--966829 | 1,930,000.00 |
| 20 | 53 ஆதி திராவிடர் விடுதிகள் மற்றும் 8 பள்ளிகளில் புதிய சுத்திகரிப்பு கருவிகள் நிறுவும் திட்டம் | 27.02.2023 | CHEQUE WDL-CHEQUE TRANSFER TO--81959 | 549,000.00 |
| **2022-2023 ஆம் ஆண்டிற்கு விடுவிக்கப்பட்ட தொகை** | | | | **1,91,91,290.00** |

<u>2022-2023-ம் நிதியாண்டில் மேற்கொள்ளப்பட்ட செலவின விபரங்கள்</u>

| வ. எண் | செலவின விபரம் | செலவு தொகை (ரூ.) | நிலை |
|---|---|---|---|
| 1 | திட்டங்களுக்காக காசோலை மூலம் விடுவிக்கப்பட்ட தொகை | 1,91,91,290 | விடுவிக்கப்பட்டது. |
| 2 | வங்கிக் கட்டணம் | 28,872 | - |
| 3 | 5% ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை | 4,01,200 | வங்கி கணக்கில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது |
| | மொத்தம் | 1,96,21,362 | -- |

விருதுநகர் மாவட்ட கனிம அறக்கட்டளை நிதியாக 31.03.2023 வரை வசூலிக்கப்பட்டு அறக்கட்டளை வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்ட தொகையில் ரூ.1,96,21,362 மட்டும் செலவு செய்யப்பட்டு 31.03.2022 வரை ரூ.17,22,43,009 வங்கிக் கணக்கில் இருப்பில் உள்ளது.

இவ்வறிக்கையானது விருதுநகர் மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளையின் மேலாண்மை மற்றும் நிர்வாக குழு முன்பு சமர்ப்பிக்கப்பட்டு ஒப்புதல் செய்யப்பட்டது.

தலைவர், மாவட்ட கனிம
அறக்கட்டளை/மாவட்ட ஆட்சியர்,
விருதுநகர்.